1986 மே 10]

உயர்நிலைப் பள்ளிகளில் பரத நாட்டியம் சிலம்புப் பயிற்றுவித்தல்

724* (வினா எண். 2718)—திரு. க. சோலைராசு மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொன்மை வாய்ந்த "பரத நாட்டியம்" தமிழர்களது வீர விளையாட்டான சிலம்பு (குச்சி விளையாட்டு) போன்றவைகளை, பயிற்றுவிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் பரத நாட்டியம், சிலம்பு போன்றவைகளைக் கற்பிக்க உத்தேசம் இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய கலாசாரத்தை, பெருமைகளை, வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற வண்ணம் இருக்கிற பரதம் இன்றைக்கு உயர்குடி மக்களிடத்திலே மட்டுமே இருக்கிற ஒரு பழக்கமாக இருக்கிறது. எனவே, இந்தப் பாரம்பரியம் மிக்க பரத நாட்டியத்தைப் பள்ளிகளில் கற்றுத் தரவேண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையில் எதிர்காலத்திலே கற்றுத்தருகிற உத்தேசமும் அவர்களுக்கு இந்தச் சிலம்பு என்கிற வீர விளையாட்டு கிராம மக்களுக்காக இருக்கிற இந்த விளையாட்டை அனைத்துத் தரப்பு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் பாதுகாப்பு முறையிலும் அது வருகிற காரணத்தாலும் எதிர்காலத்திலே பரதம், குச்சி விளையாட்டு இவைகளை பள்ளிகளிலே மாணவ-மாணவியர்களுக்குக் கற்றுத் தருகிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே பரத நாட்டியம், சிலம்பு போன்றவைகளைக் கற்பிக்கின்ற உத்தேசம் இல்லை என்றுதான் நான் விடையாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால், மேல்நிலைப் பள்ளிகளிலே பிளஸ் 2 வகுப்புகளில் மாணவிகள் பரத நாட்டியத்தைத் தொழில் பிரிவில் சேர்த்து படிக்க நாம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து இருக்கிறோம். ஆனால் அதிலே மாணவிகள் சேர்ந்து படிப்பது இல்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. ஏதாவது பள்ளியிலே போதுமான மாணவிகள் முன்வந்து நாங்கள் அந்தத் தொழில் பிரிவில் பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி முன்வந்தால் அங்கே பரத நாட்டியம் சொல்லித் தருவதற்கு ஏற்பாடு செய்யலாம். சிலம்பு விளையாட்டு என்பது அவரவர்கள் பழகிக்கொள்ள வேண்டியது தான். அதைப் பாடத் திட்டத்திலே சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. போன்ற பரீட்சைகளில் முதல் மார்க், இரண்டாவது மார்க் வாங்குகிறவர்களுக்குத் தினத் தந்தி போன்ற பத்திரிகைகளில் எல்லாம் அந்த மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பரிசுத் தொகை எல்லாம் கொடுக்கிறார்கள். முன்னாள் சபாநாயகர் பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்கள் இருக்கும்போது சடுகுடு விளையாட்டை ஊக்குவித்தார்கள். அதேபோல் தமிழ்நாடு அளவிலும் எந்த மாணவர்கள் நல்ல முறையில் சடுகுடு விளையாடுகிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுக்கும் வகையில் அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களை அரசு அறிவுறுத்துமா ?

அது மட்டும் அல்ல, பெண்கள் இப்போது சடுகுடு விளையாடுவதை விட்டுவிட்டார்கள். சடுகுடு விளையாட்டை விளையாடினால் பெண்களுக்கு உடம்புக்கு ரொம்பவும் நல்லது. ஆகவே, பணக்கார குடும்பம் என்ற படத்தில் சரோஜாதேவி அவர்கள் சடுகுடு, சடுகுடு, சடுகுடு என்று பிரமாதமாக விளையாடினார்கள். அந்தப் படத்தைப் பள்ளிகளில் குழந்தைகளுக்குப் போட்டுக் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்./

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டுப் பள்ளிகளிலே சொல்லித் தரப்படுகிறது. மாணவ, மாணவியர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

நலிந்த தமிழ்ப் புலவர்களுக்கும் உதவித்தொகை

725—(*வினா எண். 6091)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழைத் தமிழ் புலவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) உதவித் தொகையைக் கூட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1984–85 நிதி யாண்டு வரையில் 214 நலிந்த தமிழறிஞர்கள் பயன்பெற்றனர்.

(ஆ) இல்லை.